Spl.SC.No.12/2020 Dated:. 16.11.2023.

A1 to 6 and 8 present. A7 absent. Petition u/s. 317 CrPC allowed.

அ.சா. 17 வெள்ளத்துரை

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

**A1, 2, 6, 7 தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

நான் தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கையில் 2ம் எதிரி சரவணன் தான் வாகனம் ஓட்டியதாக உள்ளது என்றால் சரிதான். நான் 23.03.2020 அன்று தயார் செய்த அசாஆ. 25 சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையில் கண்ணுற்ற சாட்சிகள் சம்பவத்தை தங்கள் இருசக்கர வாகனத்தில் பின்னால் வரும் போது எதார்த்தமாக பார்த்ததாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிகள் 2,3 மற்றும் 6 எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த வைத்த வேண்டுகோள் கடிதத்திலும் அவ்வாறே கூறியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் பேருந்து நிறுத்ததில் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சாட்சிகளை பொய்யாக பின்னிட்டு சேர்த்ததால் தான் கண்ணுற்ற சாட்சிகளை பற்றிய முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் சாட்சிகளின் வாக்குமூலங்கள் நீதிமன்றத்திற்கு காலதாமதாக அனுப்பபட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரிகள் 1 மற்றும் 2 எதிரிகளின் கைபேசி எண்ணின் கால் ரெக்கார்ட்ஸ்களை கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். மேற்படி விபரங்களை கைப்பற்றி தாக்கல் செய்தால் எதிரிகள் பொய்யாக சேர்க்கப்பட்டது தெரியவரும் என்பதால் தான் அதனை கைப்பற்றி அறிக்கையுடன் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இறந்த அரவிந்தன் இராமநாதபுரம் வந்தார் என்பதை எதிரிகள் எவ்வாறு தெரிந்து கொண்டார்கள் என்று எந்த சாட்சியமும் ஆவணமும் இல்லாமல் யூகத்தின் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அவ்வாறு உள்ளது. யார் மூலம் இறந்த அரவிந்தன்

இராமநாதபுரம் வருவதாக 1வது எதிரி தெரிந்து கொண்டார் என ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளாரா என்று கேட்டால் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை. 1வது எதிரி 19.05.2020 அன்று கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு பொய்யாக புனையப்பட்டதால் தான் எதிரிக்கு அந்த தகவலை கொடுத்தது என்று விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் முன்விரோதத்திற்கு காரணமான தேவிப்பட்டிணம் காவல் நிலைய குற்ற எண் 39/2020 என்ற வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் நகலை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் குற்ற எண் 39/2020 என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். குற்ற எண் 39/2020 என்பது இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத காரணத்தால் தான் அதை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்ல என்றால் சரியல்ல. அந்த வழக்கிற்கும் இறந்த அரவிந்தனுக்கும் சம்மந்தம் இல்லை என்பதால் தான் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வேலுமாணிக்கம் பெட்ரோல் பங்கில் யாரையாது விசாரித்து சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் அவருடன் கூடவந்த கல்யாணக்குமாரை விசாரித்தால் பங்கில் உள்ளவர்களை விசாரிக்கவில்லை. அந்த பெட்ரோல் பங்கில் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளதா என்பது பற்றி தெரியாது. கல்யாணக்குமாரை சாட்சியாக விசாரித்தால் அதை பற்றி விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று எனக்கு தோன்றியது. அரவிந்தன் சென்ற வாகனத்தில் பெட்ரோல் போட்டது சம்மந்தமாக பெட்ரோல் போட்டடதற்கான பில் கைப்பற்றினேனா என்றால் கைப்பற்றவில்லை. அந்த பெட்ரோல் பங்கில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இறந்த அரவிந்தனும், கல்யாணக்குமாரும் மேற்படி பெட்ரோல் பங்கிற்கு செல்லாத காரணத்தால் தான் அந்த பங்கில் பணிபுரிந்த நபர்களை விசாரித்து சாட்சியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கல்யாணக்குமார் மற்றும் அரவிந்தன் ஆகியோரது ஓட்டுநர் உரிமங்களை கைப்பற்றி தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். பொதுவாக கொலை வழக்குகளில் கைரேகை நிபுணர்கள் மற்றும் தடய அறிவியல் அலுவலர்களை சம்பவ இடத்திற்கு வரவைப்பது வழக்கம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கார் மற்றும் பைக் டயர்களின் பதிவுகள் இருந்ததா என்று உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். 22.03.2020 அன்று அசா.1 கொடுத்த வாக்குமூலத்தில் ஆதிமூலம் கல்யாணக்குமார் சொல்லி அதை அசா.1 னிடம் சொன்னதாக இல்லை என்றால் சரிதான். அசா.2 ஆதிமூலம் தனது 22.03.2020 அன்று வாக்குமூலத்தில் கல்யாணக்குமாரிடம் சம்பவம் பற்றி கேட்டு பின்னர் அசா.1 க்கு தகவல் சொன்னதாக இல்லை என்றால் சரிதான். ஆதிமூலம் கல்யாணக்குமாரிடம் கேட்டு அதை அசா.1 னிடம் சொன்னார் என்பதை சேர்ப்பதற்ககாக 04.10.2020 அன்று கூடுதல் வாக்குமூலம் அசா.1 மற்றும் 2 ஆகீயோருக்கு பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. புகாரிலோ அல்லது வாக்குமூலத்திலோ 1வது எதிரி ஜெயிலுக்கு போவதற்கு முன்பு அரவிந்தனை தொடர்பு கொண்டு "பள்ளத் தேவிடியா மகனே, என் வண்டியை பிடித்து கொடுத்துவிட்டாயடா, உன்னை கொல்லாம்ல் விடமாட்டேன்" என்று மிரட்டியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அசா.1 புகாரிலோ எனது விசாரணையிலோ இறந்த அரவிந்தன் இராமநாதபுரத்திற்கு வண்டிக்கு உதிரி பாகம் வாங்கிவிட்டு வருவதாக சொல்லிச் சென்றதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு ஏற்பட்ட கால தாமதத்திற்கான காரணம் எதுவும் புகார்தாரர் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அசா.1 புகாரில் எதிரி பாலா என்ற பாலமுரளி கிருஷ்ணாவும் அவருடன் சிலரும் பதிவு எண் இல்லதத வெள்ளை நிற Hyundai Creta காரில் இருந்து கொண்டு என் மகன்அரவிந்தனையும் கல்யாண குமாரையும் முறைத்து பார்த்ததாகவும் அதனால் விரைவாக பெட்ரோல் போட்டுக் கொண்டு தேவிப்பட்டிணம் சென்றுவிடலாம் என்று சொன்னதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாகனங்களை கைப்பற்றிய அத்தாட்சியில் சேதங்கள் பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றால்

சரிதான். நதிப்பாலம் என்பது 4 ரோடுகள் பிரியும் இடம் என்றால் சரிதான். எதிரிகள் 1, 3, 6 ஆகீயோர்களை எங்கு வைத்து கைது செய்தேன் என்றால் உடைச்சியார்வலசை விலக்கு என்ற இடத்தில் கைது செய்தேன். காரை நதிப்பாலம் வடக்கு 1கிமீ தூரத்தில் உள்ள கருவகாட்டின் அருகே கைப்பற்றினேன். காரின் உரிமையாளர் என்று தெரிந்து கொண்டு அவரை இந்த வழக்கின் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் மேற்படி எதிரிகள் சம்பவத்திற்கு முன் ஒன்றாக கூட்டு சேர்ந்து குற்ற செயலில் ஈடுபட ஒத்திழைத்தார்கள் என்று ஏதும் இல்லை. எதிரிகள் அனைவரும் நண்பர்கள் என்பதை காட்டட அவர்களின் கைபேசி கால் டீடைல்ஸ் மற்றும் தனிநபர் சாட்சிகள் சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரிக்கும் வெள்ளை நிற Hyundai Creta காருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், அவர் யாரிடம்இருந்தும் அதை விலைக்கு வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. 1ம் எதிரிக்கும் இறந்த அரவிந்தனுக்கும் எந்த முன்விரோதமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1வது எதிரிக்கும் மற்ற எதிரிகளுக்கும் எந்த நெருங்கிய தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்த அரவிந்தனின் உடலை வாங்க மறுத்து நடைபெற்ற போராட்டங்களுக்கு பின்பு தான் எதிரிகள் மீது இவ்வழக்கு பொய்யாக ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரிகள் யாரும் கைது செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர்களிடம் இருந்த எந்தவித வழக்கு சொத்துக்கள் எதுவும்கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கான சான்று ஆவணம் மற்றும் சான்று பொருட்கள் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சரியான முறையில் விசாரிக்காமல் நிர்பந்தத்தின் பேரில் தவறுதலாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**A3 தரப்பு குறுக்கு விசாரணை**

2020 ல் நான் இராமநாதபுரம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிவதற்கு முன்பு மயிலாடுதுறை உட்கோட்டத்தில் 11 மாதம் காவல் துணைகண்காணிப்பாளராக பணிபுரிந்தேன். அந்த ஒரு வருட காலக்கட்டத்தில் பிசிஆர் வழக்கு ஏதும் விசாரித்திருக்கிறேனா என்றால் விசாரித்துள்ளேன். SC/ST Act ன் கீழ் உள்ள விதி 7 என்றால் என்ன என்பது பற்றி தெரியும். விதி 7 ன் படி விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்ட பின்பு தான் விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்று எனக்கு தெரியும். காவல் கண்காணிப்பாளர் முதல் தகவல் அறிக்கையை எப்போது பார்வையிட்டார் என்றால் தேதி நியாபகம் இல்லை. என்னை விசாரணை அதிகாரியாக நியமணம் செய்த உத்தரவு எனக்கு கொடுப்பதற்கு முன் வாய் மொழியாக தெரிவிக்கப்பட்டது என்பதை எழுத்து பூர்வமாக எந்த ஆவணங்களிலும் நான் குறிப்பிடவில்லை. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் 23.03.2020 அன்று பிறப்பித்த செயல்முறை ஆணை நான் 24.03.2020 அன்று தான் பெற்றேன் என்றால் சரியல்ல. விதி 7 ன் படி உத்தரவு என் கைக்கு வந்த பின்பு தான் விசாரணை ஆரம்பிக்க வேண்டும் என்றால் சரிதான். 22.03.2020 அன்றே விசாரணையி்ன் பெரும் பகுதியே முடித்திருந்தேன் என்றால் சரியல்ல. பகுதியாக விசாரணை செய்திருந்தேன். அசா.1 கொடுத்தபுகாரில் காயப்பட்ட அரவிந்தன் மருத்துவ மனைக்கு செல்லும் வழியிலே இறந்துவிட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அச்சு படிவ முதல் தகவல் அறிக்கையிலும், அவ்வாறு தான் உள்ளது என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையில் 11 மற்றும் 15 காலங்கள் தனித்தாளில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அறிக்கையில் அரவிந்தன் மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே இறந்துவிட்டதாக உள்ளது என்றால் சரிதான். என் புலன் விசாரணையில் அரவிந்தன் மருத்துவமனையில் சேர்த்த பின்பு இறந்தாரா அல்லது சேர்ப்பதற்கு முன்பு இறந்தாரா என்று தெரிந்து கொண்டேனா என்றால் மருத்துவமனையில் சேர்த்த பின்பு இறந்ததாக தெரிந்து கொண்டேன். விதி 7 ன் படி நான் விசாரணை மேற்க் கொண்டது சட்ட விரோதமானது என்றால் சரியல்ல. சாதாரணமாக ராமன் என்ற பெயரில் கிராமத்தில் சுமார் 10 பேர் இருப்பார்கள் என்றால் இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம். விபத்து பதிவேடு என்பது வேறு, காயச்சான்று என்பது வேறு என்று சொன்னால் சரிதான்.

விபத்து பதிவேடு என்பது காயம் ஏற்ப்பட்டவர் சொல்வதை வைத்து எழுதப்படுவது என்றால் காயப்பட்டவர் சுயநினைவோடு இருந்தால் அவர் சொல்வதை வைத்து எழுதுவார்கள். சுயநினைவோடு இல்லை என்றால் அவருடன் வந்தவர்கள் சொல்வதை வைத்து எழுதுவார்கள். இறந்து போன அரவிந்தனை பார்த்தேன். அவருக்கு வெளிப்புற காயங்கள் ஏதும் இல்லை. வெளிக்காயங்கள் இல்லை என்றால் அவருக்கு இரத்தம் வெளியேற வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இரத்தம் படிந்த மண் எதுவும் காணப்படவில்லை. அதனால் அவருடைய உடைகளில் இரத்தம் படிந்திருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். எதிரிகள் அனைவரும் வெவ்வேறு ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அடையாள அணிவகுப்பு நடத்தினேனா என்று கேட்டால் நடத்தவில்லை. எதிரி சேதுபதியை வீட்டில் இருந்து அழைத்து வந்தேன் என்றால் சரியல்ல. காயச்சான்று ஆவணம் 6 மற்றும் 7ல் தெரிந்த 4 நபர்கள் காரில் வந்து மோதியதாக வரிபிளந்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை எனது ஆலோசனையின் பேரில் மருத்துவர் பின்னிட்டு எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. அரவிந்தன் இறந்தது சம்மந்தமாக போராட்டங்கள் நடந்தது என்றால் சரிதான். இறந்த அரவிந்தனையும் காயப்பட்ட கல்யாணக்குமாரையும் ஒரே நேரத்தில் தான் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் சரிதான். விபத்துச் சான்றில் "வாகன விபத்து" என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் அரவிந்தனை இரவு 11.30 மணிக்கு மருத்துவமனைக்கு கொண்டுவந்ததாக காணப்படுகிறது. விபத்து பதிவேட்டில் அரவிந்தனை மருத்துவமனையில் சேர்த்தது வைரவகேசு என்று உள்ளது என்றால் சரிதான். காயப்பட்ட கல்யாணக்குமாரை மறுநாள் காலை 02.30 மணிக்கு மருத்துவமனையில் சேர்த்ததாக உள்ளது என்றால் சரிதான். அதில் அவரை மருத்துவமனையில் உறவினர் மாரிதாஸ் என்பவர் சேர்த்ததாக உள்ளது என்றால் சரிதான். இரண்டு நபர்களையும் வெவ்வேறு நேரத்தில் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் தேவிப்பட்டிணம் காவல் நிலையத்தில் தங்கராசு என்ற சார்பு ஆய்வாளர் பணியில் இருந்தார் என்றால் சரிதான். அவர் தான் விபத்தை கேள்விப்பட்டு முதன் முதலில் சம்பவ இடம் சென்றார் என்றால் சரிதான். அவரிடம் கல்யாணக்குமார் ஒரு வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த வாக்குமூலம் தான் இந்த வழக்கில் கொடுக்கப்பட்ட முதல் புகார் என்றால் சரியல்ல.

பைக் மற்றும் கார் யாருடையது என்று வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. இரண்டு வாகனத்திற்கும் உரிமையாளர் யார் என்று எந்த ஆவணமும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். ஒரு வாகனம் விபத்திற்குள்ளானால் அதை மோட்டார் ஆய்வாளரின் அறிக்கை பெற ஆய்வுக்கு அனுப்ப வேண்டும் என்றால் விபத்து வழக்கு என்றால் அதை அனுப்புவோம். இரண்டு வாகனமும் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்கள் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரி சேதுபதியை நான் கைது செய்யவில்லை என்பதும் நான் பொய்யாக இவ்வழக்கில் அவரை சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. அசா.1 சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில் 27.07.2020 அன்று கொடுத்த மனுக்கள் மீது விசாரணை செய்து வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று தான் பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சட்டப்படி இந்த வழக்கினை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரி சேதுபதிக்கும் சம்மந்தம் இல்லை என்பதும் வெளி அழுத்தம் காரணமாக அவரை எதிரியாக இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

A5 தரப்பு குறுக்குவிசாரணை

இவ்வழக்கில் இதச 120 பி பிரிவை சேர்த்து பிரிவு மாற்றல் அறிக்கை 23.03.2020 அன்று தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் விசாரணை அதிகாரியாக நான் நியமிக்கப்பட்ட உத்தரவில் இதச 120 பிரிவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் பிரேத விசாரணை செய்யப்பட்ட பிறகு தான் பிரேத பரிசோதனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் என்னுடைய பிரேத பரிசோதனை அறிக்கை காலம் எண் 14ல் பிரேத பரிசோதனைக்கு பின் உறவினர்களிடம் உடலை ஒப்படைத்ததாக எழுதி உள்ளேன் என்றால் சரிதான். பிரேத விசாரணை சாட்சிகள் யாரும் சாட்சி பட்டியலில் இடம் பெறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் இறந்து போன அரவிந்தன் இராமநாதபுரம் வந்து போனதற்கு எந்த வித ஆவணமும், சாட்சியும் இல்லை என்றால் சரியல்ல. குற்ற வழக்கில் யாரேனும் ஒரு நபர் கைது செய்யப்பட்டால் அவரது கைது குறித்து அவரது உறவினர்களுக்கு செய்தி தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். 5வது எதிரியின் கைது குறிப்பாணையில் அவர் கைது பற்றி யாரிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது என்று குறிப்பு ஏதும் இல்லை

என்று சொன்னால் குறுந்தகவல் மூலம் ஒரு நபருக்கு அனுப்பியதாக தகவல் உள்ளது. அவ்வாறு அனுப்பியதாக குறிப்பு ஏதும் கைது குறிப்பாணையில் இணைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 5ம் எதிரி நான் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் கைது செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

A8 தரப்பு குறுக்குவிசாரணை

8வது எதிரி பெயர் குறித்து முதல் தகவல் அறிக்கையிலும், பிரிவு மாற்றல் அறிக்கையிலும் இடம் பெறவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையிலும் சாட்சிகள் வைரவகேசு, ஆதிமூலம், பூமிராஜன், காளிதாஸ், முனியாண்டி ஆகியோரது முதல் வாக்குமூலங்களிலும் 8வது எதிரியை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு வாகனத்தை விற்பனை செய்தால் அதை விற்பனை செய்யும் நிறுவனம் யாருக்கு விற்பனை செய்யப்பட்ட தேதி, கடன் வாங்கிய வங்கி போன்ற விவரங்கள் இருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கில் மேற்கூறிய விவரங்கள் எதையும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரிகள் எங்கு இருந்தார்கள் என்பதை காட்ட அவர்கள் Tower location விவரங்களை கைப்பற்றினேனா என்றால் கைப்பற்றவில்லை. நான் அவற்றை எல்லாம் கைப்பற்றினேன் என்பதும் அது வழக்கிற்கு விரோதமாக இருந்ததால் மறைத்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக வாகனம் ஓட்டுபவர் தலை கவசம் அணியவில்லை என்றாலும் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஓட்டினாலும் மோட்டார் வாகன சட்டப்பிரிவு படி அந்த மோட்டார் வாகனத்தின் உரிமையாளர் தான் பொறுப்பு ஆவார் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு சென்று உதவி ஆய்வாளர் பொதுநாள் குறிப்பில் தான் பார்த்ததை பற்றி எழுதினாரா என்று நான் பார்க்கவில்லை. மே 2020ற்கும் அக்டோபர் 2020ற்கும் இடையே அ.சா.1 அமீர்கான் என்பவரை தன் மகனை இராமநாதபுரம் அழைத்து சென்றதற்கு காரணம் என்று தாக்கியது இவ்வழக்கு சம்மந்தம் உடையது என்றால் சம்மந்தம் இல்லை. இந்த வழக்கிற்கு அது முக்கியமான சங்கதி என்றும் நான் அதை மறைத்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த

வழக்கிற்கு 8 வது எதிரிக்கு எந்த வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 8 வது எதிரி சில வழக்குகளில் போட்டோ கிராபராக இருப்பதற்க மறுப்பு தெரிவித்ததால் அவரை இவ்வழக்கில் சேர்த்து விட்டேன் என்றால் சரியல்ல.

**மேற்படி அனைத்து எதிரிகளின் குறுக்குவிசாரணை 4ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

Sd/- B.C. Gopinath
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)